**செய்தி வெளியீடு எண்:018** **நாள்: 06.01.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்து சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில் விரிவான ஆய்வுக் கூட்டம் **(06.01.2017)** இன்று நடத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை சராசரியைக் காட்டிலும் **62** சதவீகிதம் குறைவாக இருப்பதால், ஊரகப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதைக் கருத்திற் கொண்டு, கீழ்காணும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க விரிவான அறிவுரைகள் வழங்கினார்.

**தமிழ்நாட்டில் உள்ள ஊரக பகுதிகளில்,**

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| கிராம ஊராட்சிகள் | 12,524 |
| குக்கிராமங்கள் | 79,394 |
| ஊரக மக்கள் தொகை | 4,04,86,223 |
| மொத்த குடியிருப்புகள் | 1,26,47,214 |

ஆகியன உள்ளன.

கிராம ஊராட்சி பகுதிகளில் 2,22,921 கை பம்புகள், 1,11,581 சிறு விசைப் பம்புகள் மற்றும் 1,13,321 விசைப் பம்புகள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் 97,977 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் 9,386 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் கிராம பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர ஊரகப் பகுதிகளில் 549 கூட்டு குடிநீர் திட்டங்களின் மூலம் 5,194 கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. இவற்றை முறையாக பராமரித்து அனைத்து ஊரகப் பகுதிகளிலும் அனைத்து மக்களுக்கும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும். மேலும்,

- குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்கும் பொருட்டு மாவட்டங்களில் உள்ள குடிநீர் தேவையை மதிப்பீடு செய்து விரிவான தற்செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
- குடிநீர் விநியோகப்பணிகள் உள்ளிட்ட வளர்ச்சி பணிகளை கண்காணிப்பதற்கான பொறுப்பு அலுவலர்கள் ஊராட்சி அளவில் நியமிக்க வேண்டும். உதவி இயக்குநர் நிலையில் வட்டார அளவிலும் நியமிக்கப்பட வேண்டும்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த கண்காணிப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் வாரந்தோறும் நடத்தப்பட்டு ஊரகப்பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் போதுமான குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்குவதை அன்றாடம் கண்காணிக்க வேண்டும்.
- மின் மோட்டார்கள் பழுதின்றி செயல்படவும் இணைப்பு குழாய்கள் மற்றும் கைப்பம்புகள் நல்ல முறையில் செயல்படவும் வாரத்திற்கு ஒரு முறை பொறுப்பு அலுவலர்கள் ஆய்வு செய்து எல்லாப் பகுதிகளிலும் முறையாக குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- கிராம ஊராட்சிகளில் உள்ள அனைத்து கைப்பம்பு மற்றும் விசைப்பம்புகள் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்யவும் பழுதான நிலையில் உள்ள இனங்களை ஊராட்சி பொது நிதியில் நிவர்த்தி செய்து 3 தினங்களில் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.
- குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்டத் தொட்டிகள் 15 நாட்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்ய வேண்டும்.
- மேலும் சரியான முறையில் குளோரினேஷன் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் மக்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

- ஒவ்வொரு ஊராட்சியிலும் போதுமான பிளீச்சீங் பவுடர் (Bleaching powder) குளோரின் மாத்திரைகள் (Chlorine) மற்றும் கிருமி நாசினிகள் ஆகியவை போதிய அளவில் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

- குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க இயலாத பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை இணையதளம் மூலம் கண்காணித்திட மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. தினந்தோறும் குக்கிராமம் வாரியாக குடிநீர் விநியோக நிலை குறித்து அனைத்து கிராம ஊராட்சிகளும் இணையதளம் வாயிலாக கண்காணிக்க வேண்டும்.

- இதன்படி மூன்று நாட்களுக்கு மேல் குடிநீர் விநியோகம் செய்யப்படாத குக்கிராமங்களைக் கண்டறிந்து உடனுக்குடன் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

- மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அரசினால் வழங்கப்படும் நிதி மற்றும் அவைகளின் பொதுநிதியில் பணிகள் மேற்கொள்ளும் போது, குடிநீர் திட்டப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

- நடப்பு மாதத்தில் மத்திய நிதிக்குழு மானியம் ரூ.656 கோடி மற்றும் மாநில நிதிக்குழு மானியம் ரூ.207.14 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியினைப் பயன்படுத்தி, தேவைப்படும் பகுதிகளில் குடிநீர் பணிகள் மேற்கொண்டு குடிநீர் தங்கு தடையின்றி வழங்க வேண்டும்.

- பொது மக்கள் குடிநீரை மிகவும் சிக்கனமான முறையில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களான தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்–II) திட்டம், ஊரக குடியிருப்புத் திட்டங்களான சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் மற்றும் பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், திடக் கழிவு மேலாண்மை, ஊரக சாலைப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஏற்கெனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது நிலுவையிலுள்ள அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும் என்றும், நடப்பு நிதியாண்டில் அனைத்து திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளையும் உரிய காலத்திற்குள் முடிக்கும் வண்ணம் விரைவாக செயலாற்ற வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், அனைத்து திட்டப் பணிகளையும் தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க, உரிய காலத்தில் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தற்போது பயன்பாட்டில் உள்ள தெரு விளக்குகள் 100 சதவீதம் எரிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஊராட்சியில் உள்ள தெருக்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். தெருவிளக்கு மற்றும் குடிநீர் தொடர்பாக வரும் புகார்கள் மீது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

விவசாயப் பணிகள் பாதிப்பின் காரணமாக கிராம மக்களுக்கான வேலை வாய்ப்பினை உறுதி செய்திடும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் 3.5 கோடி மனித சக்தி நாட்கள் கூடுதலாக மொத்தம் 35 கோடி மனித சக்தி நாட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டு அதிக அளவில் நிலத்தடி நீரினை செறிவூட்டும் பணிகளை அனைத்து கிராமங்களிலும் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், கண்காணிப்பு பொறியாளர் (ஊரக வளர்ச்சி), அனைத்து மாவட்டங்களின் திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**